**தொன் போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரிஇ கீழஈரால்**

**(தேசிய தர நிர்ணயக்குழுவால் “B” தரச்சான்று பெற்ற கல்லூரி)**

**தமிழ்த்துறை மற்றும் சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ் (ISSN)**

**இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம் - 09 பிப்ரவரி 2024**

**கருத்தரங்க அறிக்கை**

வணக்கம்.

கீழஈரால் தொன் போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறையில் 09 பிப்ரவரி 2024 அன்று சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழோடு (ISSN) இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம் “இலக்கியங்களில் மனித மதிப்பீடு” எனும் பொருண்மையில் கல்லூரி போஸ்கோ அரங்கத்தில் நடைபெற்றது. காலை 10.00 மணிக்குத் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவக்கவிழா ஆரம்பிக்கப்பட்டது. குத்துவிளக்கு ஏற்றப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கோ.தமிழரசி அவர்கள் வரவேற்பரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் இரா.தா.திலகா அவர்கள் பன்னாட்டுக் கருத்தரங்கு சிறப்பற அமைய வாழ்த்துரை வழங்கினார். பன்னாட்டுக் கருத்தரங்கு ஆய்வுக்கோவையினை கல்லூரிச் செயலர் அருள் முனைவர் செ.விக்டர் அந்தோணிராஜ் அவர்கள் வெளியிட்டார். கருத்தரங்கப் பொருண்மையின் விளக்கத்தினை தமிழ்த்துறை பேராசிரியர் சு.தெய்வரத்தினா வழங்கினார்கள். இலங்கைப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் சூரியகுமார் அவர்கள் “மனித மதிப்பீடும் தமிழர் பண்பாடும்” எனும் தலைப்பில் இணையவழியில் சிறப்புரையாற்றினார்கள். பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் ரில்பர்ட் ஜெனார்த்தனன் அவர்கள் “காலந்தோறும் மனிதநேயம்” எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள். 11.30 மணியளவில் தேநீர் இடைவெளிக்குப் பிறகு கருத்தரங்க அமர்வுகளில் கட்டுரை எழுதிய கட்டுரையாளர்கள் தங்களின் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். திருநெல்வேலி சதக் அப்துல்லாhக் அப்பா

கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் ஞா.அந்தோணி சுரேஷ் அவர்கள் “மனிதநேயம் அன்றும் இன்றும்” எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள். மதியம் 1.30 மணிமுதல் 2.00 மணிவரை உணவு இடைவேளை விடப்பட்டது. மதியம் 2.30 மணிக்கு நிறைவு விழாவில் தமிழ்மொழி வாழ்த்துப்பாடல் துவக்கமாக அமைந்தது. அந்நிகழ்வில் கல்லூரிச் செயலர் அருள்முனைவர் செ.விக்டர் அந்தோணிராஜ் அவர்கள் கருத்தரங்கத்திற்கான ஆசியுரை வழங்கினார்கள். கோயம்புத்தூர் கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அனிதா சோபியா மார்கிரேட் அவர்கள் “தமிழர் வாழ்வில் மானுடம்” எனும் தலைப்பில் நிறைவுப் பேரூரை வழங்கினார்கள். கருத்தரங்கிற்குக் கட்டுரை எழுதியவர்களுக்குக் கல்லூரிச் செயலர் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார்கள். கருத்தரங்கில் கலந்துகொண்ட ஆய்வுமாணவர்களுக்குஇ முதுகலை மாணவர்களுக்கு மற்றும் உடன் வந்திருக்கும் பேராசிரியர்களுக்கும் பங்கேற்புச் சான்றிதழைக் கல்லுரி முதல்வர் வழங்கினார்கள். பன்னாட்டுக் கருத்தரங்கு நிறைவாகத் தமிழ்த்துறை பேராசிரியர் சு.ஐயப்பன் அவர்கள் நன்றியுரை நவின்றார்கள். பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் கல்லூரியின் அனைத்துத் துறைத்தலைவர்கள்இ அருட்தந்தையர்கள் தமிழ்த்துறை மாணவர்களும் கலந்து கொண்டார்கள். கருத்தரங்கத்திற்கு ஏழு கல்லூரியிலிருந்து பேராசிரியர்களும், தமிழ்த்துறை மாணவர்களும் வருகை புரிந்திருந்தனர். கருத்தரங்கமானது நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.




GPS Map Camera
Google
Kela Eral, Tamil Nadu, India
5, New Colony, Valasaravakkam, Kela Eral, Tamil Nadu 628908, India
Lat 9.096472°
Long 78.010382°
09/02/24 10:53 AM GMT +05:30




தமிழ்த்துறை மற்றும்
சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ்
இணைந்து நடத்தும்
கல்லூரி அரங்கம்


DON BOSCO COLLEGE
KEELA ERAL
GPS Map Camera
Kela Eral, Tamil Nadu, India
5, New Colony, Valasaravakkam, Kela Eral, Tamil Nadu 628908, India
Lat 9.096536°
Long 78.010232°
09/02/24 03:54 PM GMT +05:30
Google